*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# குலசேகர ஆழ்வாரின் இராம அவதார சிறப்புகள்

**முனைவர் மீ. கோமதி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரி, மண்ணச்சநல்லூர்

## முன்னுரை

*அறவழிப் பண்பாட்டை நிலைநிறுத்தவே இறைவன் யுகங்கள் தோறும் அவதாரம் செய்கின்றான். பிரம்மனாக இருந்து உலகைப் படைத்து, விஷ்ணுவாக இருந்து உலகைக் காத்து, உருத்திரனாகி உலகை அழிக்கும் கடவுள், காத்தல் தொழிலை மேற்கொண்ட விஷ்ணுவின் அம்சமாகவே அறத்தை நிலைநாட்ட அவதாரம் செய்கின்றான். அந்த வகையில் குலசேகர ஆழ்வார் இராம அவதாரத்தின் மீது கொண்டுள்ள ஈடுபாட்டை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.*

**அவதாரம் - பொருள்**

அவதாரம் என்ற சொல்லுக்கு கீழ் இறங்குவது என்ற பொருளாகும். கீழ் இறங்குவது என்பது மேலிடத்தில் வஸ்துவிற்கு குறிப்பிடப்படுகிறது. ஒரு பொருள் மேலிடத்தில் இருந்து அதுவே கீழ் இறங்குவது என்ற கருத்து அவதாரம் என்ற சொல்லிலிருந்து கிடைக்கிறது. தன்னுடைய இடத்திலிருந்து கீழ் இறங்குவது தன்னுடைய உருவத்தை மாற்றி கீழ் நிலையிலுள்ள பல உருவங்களை எடுப்பதும் அவதாரக் கொள்கையின் அடிப்படையான கருத்தாகும். பிறப்பு இயல்பில்லாமல் உயர்நிலையிலிருந்து தெய்வம் தாழ்ந்துள்ள நிலையை அடைந்து பிறப்பை எடுப்பது அவதாரக் கொள்கையைச் சார்ந்தது ஆகும்.

**அவதார கருத்துக்கள்**

அவதாரக் கருத்துக்களை வெளியிடும் ஆகமங்கள் பத்மநாபன் முதலான 36 அவதாரங்களைச் சொல்லுகின்றன. மக்களின் தெய்வ நம்பிக்கை எங்கெங்கு இருந்து வருகிறதோ அவையே அவதாரங்களின் இருப்பிடமாய் அமைந்தன. இக் கருத்துக்களின் விளக்கமே அவதாரம் என்று கூறப்படுகிறது. உலகத்தோடு விளையாடுவது மட்டும் நில்லாமல் தன்னுடைய இயற்கையை விடாமலே தானும் பலவித மாறுதல்களை அடைகிறான். இதுதான் அவதாரம் என்று கூறப்படுகிறது அவதாரம் என்பது சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவைகளைச் செய்வதோடு தானும் பல உருவங்களை எடுத்துக்கொண்டு பல பெயர்களில் பிறப்பதாகும். இந்த அவதாரங்கள் ஜீவ வர்க்கத்தை பாதுகாக்கவே ஏற்படுகின்றது. கருணையை காரணமாகக் கொண்டு பகவான் செய்யும் அவதாரங்களில் முதல் அவதாரம் 'பரம்' என்ற அவதாரம் ஆகும். பரம் என்றால் உயர்ந்தது என்ற பொருள்.

பகவான் தன்னை அண்டினவர்களை காப்பாற்றுவதற்காகத் தேவர்களிடையும், மனிதர்களிடையும் விலங்குகளிடையும் பிறக்கிறான். அந்த அவதாரத்திற்கு இடத்திற்குத் தகுந்தாற் போல வேண்டின குணங்களை வேண்டிய

போது மறைத்தும், வேண்டியபோது வெளியிட்டும் விபவம் நடத்தும் சில இடங்களில் பகவான் உருவத்தை மட்டும் எடுக்கிறான். நல்லவர்களைப் பாதுகாப்பதும் கெட்டவர்களை அழிப்பதும் அவதாரத்தின் நோக்கம் ஆகும்.

**அவதார அடையாளம்**

கிருஷ்ண பரமாத்வாக "உலகத்தில் தருமம் அழிந்து அதர்மம் ஓங்குகிற சமயம் நான் உலகத்தில் அவதாரம் எடுக்கின்றேன்" என்று ஆன்மாக்களை உய்விக்கவே இறைவன் அவதாரம் எடுக்கிறான். அதர்மம் வந்ததும் அதை ஒழித்து தர்மம், அறம் முதலியன மேலோங்கவும், ஒவ்வொருவருக்கும் யார் என்று அடையாளம் காட்டவே அவதாரம் எடுத்தார்.

இத்தகைய நிலையில் இராம அவதாரத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவராக குலசேகர ஆழ்வார் திகழ்ந்தார். பெருமான் பூமகள் தலைவனாகிய திருமாலே உயர்ந்தவன். பரமபதத்தைக் காட்டிலும் தசரதன் திருமகனாய் அவதரித்த நிலையே சிறந்ததென மனத்துள் ஏற்றவர். பெருமை வாய்ந்த பரமபதத்தையும் திருப்பாற்கடலையும் நீத்து எல்லை இல்லா எளிமையுடன் மண்ணிற் பிறந்து இராமனாகவும், கிருஷ்ணனாகவும் அவதாரம் செய்த திருவுருவங்கள் ஆழ்வார் மனதில் படிந்தமை சக்ரவர்த்தித் திருமகனை ஒரு மண்டபத்தில் நாளும் பூசை செய்து அடியார் நாளும் இராம அவதாரத்தை விரித்து உரைக்குமாறு செய்தார் ஆழ்வார்.

இராமன் சிறு குழந்தையாக இருந்தபோது அவருக்கு தாலாட்டு பாடிய விதம் பற்றியும், இராமன் காட்டிற்கு செல்லும் பொழுது அவரது தந்தையான தசரதன் புதல்வன் பிரிவினால் உற்ற துயரத்தையும், திருமாலின் சிறப்புகளைப் பற்றியும் ஆழ்வார் தம் பாசுரங்களில் பாடியுள்ளார்.

**இராமர் தாலாட்டு**

குழந்தை பருவத்தில் குழந்தைகளுக்கு தாலாட்டு பாடுவது இயல்பு ஆகும். அதுபோல இராமன் குழந்தையாக இருந்தபோது அவரது சிறப்புக்களைக் கூறி அவரை, தாலாட்டுகின்றார். இராமன் தாலாட்டினை குலசேகர ஆழ்வார் பாசுரமாக பாடியுள்ளார். இதனை,

"மன்னுபுகழ் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்"

அழிவில்லாத புகழினை உடைய கௌசல்யா தேவியின் அழகிய வயிற்றில் பிள்ளையாக அவதரித்தவர் இராமன் ஆவார். தெற்கு திசையில் உள்ள இலங்கையின் அரசனான இராவணனின் பத்துத் தலைகளும் சிதறி விழும்படி பாணம் தொடுத்தவன் ஆவான். இதனை,

"ஒருபக லுலகெலா முதரத் துட்பொதிந்து
அருமறைக் குணர்வரு மவனை யஞ்சனக்
கருமுகிற் கொழுந்தொழில் காட்டுஞ் சோதியைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை"

என்று தங்கத்திலே செய்யப்பட்ட அழிவற்ற, அழகான பெரிய மதிலால் நான்கு புறமும் சூழப்பட்ட திருக்கண்ணபுரத்தில் வீற்றிருக்கும் கண்ணின் கருமணி போன்ற இராகவனை தாலாட்டுகிறார்.

**தாடகையை வென்றவன்**

"புண்டரிக மலரதன்மேல் புவனியெல்லாம் படைத்தவனே
திண்டிறலாள் தாடகைதன் உரமுருவச் சிலை வளைத்தாய்"

தாமரை மலரின் மேல் பிரம்மாவை தோற்றுவித்து அவர் மூலம் உலகங்களை படைத்தவர். மிகுந்த வலிமையை உடைய தாடகையின் மார்பைத் துளைக்கும்படி பாணம் எய்தவன் என்பதை,

"வல்லாளரக்கர் குலப்பாவை பாட, முனிதன் வேள்வியை
கல்விச் சிலையால் காத்தானூர் கண்ணபுரம் நாம் தொழுதுமே"

காணுபவர் எல்லாம் தங்கள் மனதைப் பறிகொடுக்கும்படியாக திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள ராகவனை எட்டு திசைகளையும் ஆளக்கூடிய இராமனை தாலாட்டுகின்றார்.

**கௌசல்யாவின் புதல்வன்**

"கொங்குமலி கருங்குழலாள்

கௌசலை தன் குலமதலாய்
தங்குபெரும் புகழ்ச்சனகன்
திருமருகா! தாசரதீ”
என்பதை கருமையான கூந்தலை உடைய கௌசல்யா தேவியின் குலத்தை செழிக்க வைத்தவன். புகழை நிரந்தரமாக பெற்றிருக்கும் ஜனகனின் மருமகன் ஆவான். கங்கை நீரிலும், புனிதமான தீர்த்தங்களை உடைய, இராஜ வம்சத்துக்கு எல்லாம் இனிய அமுதமாய் விளங்கும் இராகவனை தாலாட்டுகின்றனர்.

**திருக்கண்ணபுரத்தில் உறையும் மன்னன்**

செல்வ வளம் நிரம்பிய அயோத்தியை ஆளும் உரிமையை பரதனுக்கு அளித்துவிட்டு மிகுந்த அன்பினை உடைய இலட்சுமணனோடு காட்டுக்குச் சென்றவன். வீரலெஷ்மிக்கு இருப்பிடமான மலை போன்ற மார்பினை உடையவன். கண்ணபுரத்து மன்னனாக இருப்பவன். அத்தகைய ராமனை குலசேகர ஆழ்வார் தாலாட்டுகின்றார்.

“பாராளும் படர்செல்வம் பரத நம்பிக்கை அருளி
ஆரா அன் பிளையவனோடு அருங்கான மடைந்தவனே”
என்று கூறுகின்றார்.

**திருக்கண்ணபுரத்தில் உறைபவன்**

அயோத்தி நகர மக்கள் எல்லாரும் இராமனுடைய உறவினர் போல் அவரது ரதத்தைப் பின்தொடர்ந்து வர பழமையான தண்டகாரண்யத்தை அடைந்தார். இராமனின் அடியார்களுக்கு ஔடதமாய் விளங்குபவர். சிற்றன்னை கைகேயின் சொல்லை ஏற்றுக்கொண்ட இராமபிரானை

“கற்றவர்கள் தாம் வாழும் கணபுரத்தென் கருமணியே
சிற்றவைதன் சொற்கொண்ட சீராமா தாலேலோ”
என்று ஆழ்வார் பாராட்டுகின்றார். மேலும்

“ஆலினிலைப் பாலகனாய் அன்றுலக முண்டவனே
வாலியைக் கொன்று அரசினைய வானரத்துக் களித்தவனே”

ஊழிக்காலத்தில் உலகத்தை உண்டு வயிற்றினில் அடக்கி ஆலிலை மேல் பாலகனாய் இருந்தவன். வாலியை வதம் செய்து கிஷ்கிந்தைக்கு சுக்ரீவனை வேந்தனாக அமர்த்தியவன் ஆவான் என்று திருவாலி திருநகரிக்குத் தலைவனாகவும் அயோத்திக்கு மன்னனாகவும் இருந்த இராமபிரானை சிறப்பிக்கின்றார்.

**இலங்கையை அழித்தவன்**

மலைகளைக் கொண்டு பாலங்களை கட்டி, அரண்களை உடைய இலங்கையை அழித்தவன். திருப்பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமுதம் கிடைக்கச் செய்தவன் என்று இராமபிரானின் வடிவத்தை குறிப்பிடுகின்றார் என்பதை,

“மலையதனா லணைகட்டி மதிளிலங்கை அழித்தவனே
அலைகடலைக் கடைந்த மரர்க் கமுதருளிச் செய்தவனே”

**பாசுர சிறப்பு**

“கன்னி நன்மா மதிள் புடைசூழ் கணபுரத்தென காருத்தன்
தன்னடிமேல் தாலேலோ என்றுரைத்த தமிழ் மாலை
கொல்நவிலும் வேல்வலவன் குடை குலசேகரன் சொன்ன
பன்னியநூல் பத்தும் வல்லார் பாங்காய பக்தர்களே”
என்பதை கொலைத் தொழில் புரியும் வேலினைக் கையில் கொண்ட கொற்றக் குடைக்கீழ் அரசாண்ட குலசேகர ஆழ்வார் அழிவில்லாத பெரிய மதில்களால் நான்கு புறமும் சூழப்பெற்ற இறைவனை தாயாக இருந்து பாமாலைகளினால் தாலாட்டுகின்றார்.

குலசேகர ஆழ்வார் இராம அவதாரத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர். குழந்தையாக இருந்து திருமாலை தாலாட்டிய முறையும், இராமன் நாட்டை விட்டு காட்டிற்கு சென்றமையும் எடுத்தாளப்பட்டுள்ளது. இவ்வாறாக குலசேகர ஆழ்வார் இராமன் மேல் கொண்ட பக்தியானது திண்ணம் என்பதை உறுதி செய்யப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்:**


1. திருவேங்கடஇராமானுஜ தாசன் - நாலாயிர திவ்வியப் பிரபந்தம்
2. முருகப்பன். சோ - முருகம்பர் அருளிய இராமகாதை
3. இராமச்சந்திரன் - ஸ்ரீ ராமனும் கிருஷ்ணனும்
4. ப. அருணாச்சலம் - பக்தி இலக்கியம்